**ரிமைத் துறப்பு:** இப்பதிப்பு மூல ஆங்கிலப் பதிப்பின் மொழிபெயர்ப்பாகும். இது தகவல் தரும் நோக்கத்திற்காக மட்டுமேயன்றி இதுவே பாலிசி ஒப்பந்தமாகக் கருதப்படுவதற்காக அல்ல. இதில் ஏதேனும் தவறுகள் காணப்பட்டால், மூல ஆங்கிலப் பதிப்பே நிலைபெறும். துல்லிய மொழிபெயர்ப்புக்காக நியாயமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், சில பகுதிகளில் பிழைகள் இருக்கலாம். இந்த மொழிபெயர்ப்பை சார்ந்திருப்பவர், அவரது சொந்தப்பொறுப்பில் இதை ஏற்றுக் கொள்கின்றார். இந்த மொழிபெயர்ப்பில் உள்ள ஏதேனும் பிழை, தவறவிடல் அல்லது தெளிவின்மை மற்றும் மொழிபெயர்ப்பைச் சார்ந்திருப்பதால் எழும் நட்டங்களுக்கு இன்கம் பொறுப்பேற்காது.

# Free 30-day Dash Protect
# பாலிசி நிபந்தனைகள்

## பாலிசி

இந்த ஆவணம் NTUC Income Insurance Co-operative Ltd (‘**நாம்**’) பாலிசி காப்பீடு பெற்றவருக்கு வழங்கும் பலன்களுக்காக SingCash Pte Ltd’s (‘**பாலிசிதாரர்**’) தேர்வு செய்யப்பட்ட வாடிக்கையாளருக்காக (‘**நீங்கள்**‘) ஏற்கும் குழுக் காப்பீட்டு ஆவணத்தின் நிபந்தனைகளை வரையறுக்கிறது.

**பாலிசிதாரர்** பாலிசிக்காக **எமக்குச்** செலுத்தும் பிரிமியம் தொகை சம்பந்தமாக, **பாலிசிதாரர்** இக்குழு காப்பீட்டுப் **பாலிசியின்** கீழ் ஒப்புக்கொள்ளும் பலன்கள்:

- **பாலிசிதாரரால்** நியமனம் பெற்ற தேர்வு செய்யப்பட்டவருக்காக (**நீங்கள்**) இலவசமாக வழங்கப்படுகிறது;
- **பாலிசிதாரர்** மற்றும் **எம்மால்** இணைந்து எடுக்கப்படும் முடிவைத் தொடர்ந்து தொகை வசூலிக்கப்படலாம். மற்றும்
- கீழே அச்சிடப்பட்டவாறு எமது காப்பீட்டுக் கவச நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

**நீங்கள் எம்மிடம் இப்பாலிசியில்** வரையறுக்கப் பட்டுள்ளபடி, பொருந்தும் ஷரத்துக்கள், நிபந்தனைகள் மற்றும் விலக்குகள் ஆகியவற்றுக்குட்பட்டு கோரல்களைச் சமர்ப்பிக்கலாம். **உங்களுக்கு** அல்லது **உங்களது** சட்டப்பூர்வப் பிரதிநிதிக்கு **நாம்** காப்பீட்டுத் தொகையைச் செலுத்துவோம்.

விண்ணப்பிக்கும்போது கைப்பேசியில் வாய்மொழியாக அல்லது தொலைநகல், மின்னஞ்சல் அல்லது இணையத்தளம் மூலம் அனுப்புதல் உட்பட **நீங்கள்** அல்லது **பாலிசிதாரர் உங்களது** சார்பில் வழங்கிய ஏதேனும் வாக்குமூலம், தகவல் அல்லது உறுதிமொழிதல் இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையாக அமையும்.

**சேர்க்கையை உறுதிப்படுத்துதல்** மற்றும் ஏற்றுக்கொண்ட எண்டார்ஸ்மெண்டுகள் ஆகியவை இப் **பாலிசியின்** பகுதிகள் ஆகிவிடும்.

## உங்கள் பாலிசி கவசமளிப்பது

இப் **பாலிசியில் காப்பீட்டுக் காலத்தின்போது** நிகழும் குறிப்பிட்ட நிகழ்வுகளின்போது ஏற்படும் நிதிநிலமைகளுக்கு **உங்களுக்கு** இப் **பாலிசி** காப்பீட்டுப் பாதுகாப்பை வழங்குகிறது.

**நமது** பணம்செலுத்துதல் மற்றும் தொகை, இப் **பாலிசியின்** ஷரத்துகள், நிபந்தனைகள் மற்றும் விலக்குகள் ஆகியவற்றுக்குட்பட்டவை ஆகும்; அதிகப்பட்ச பலன் இக் **காப்பீட்டு அட்டவணையில்** வரையறுக்கப் பட்டுள்ளபடி வரம்பிடப் பட்டுள்ளது.

# காப்பீட்டு அட்டவணை

| பலன் | | அதிகப்பட்சப் பலன் **(S$)** காப்பீடுபெற்ற ஒருவருக்கு |
|---|---|---|
| பிரிவு 1 | **விபத்தில்** மரணம் | $5,000 |
| பிரிவு 2 | **நிரந்தர ஊனம்** | $5,000 |

## தகுதிநிலை

இப் **பாலிசியின்** கீழ் பாதுகாப்பளிக்கப்பட **நீங்கள்**:

- ீங்கள் சிங்கப்பூர் குடிமகன், சிங்கப்பூரில் நிரந்தரமாக வசிப்பவராக; அல்லது சிங்கப்பூரில் செல்லுபடியாக இருக்கும் வேலைவாய்ப்புக் கடப்பிதழ், பணி அனுமதி, நீண்டகாலத் தங்குதல் கடப்பிதழ் அல்லது மாணவர் கடப்பிதழ் போன்ற ஆவணங்களை வைத்துள்ளவராக இருந்தால்;
- ீங்கள் 16 முதல் 85 **வயதுடையவர்** என்றால்;
- **உங்களது** காப்பீட்டு **பாலிசி** விண்ணப்பத்தை இன்கம் மற்றும் **பாலிசிதாரர்** முறையாக அங்கீகரித்திருந்தால்; மற்றும்
- இத்திட்டத்தின் கீழ் **உங்களுக்காகப்**, **பாலிசிதாரர் பாலிசியின்** பிரிமியத்தை முழுமையாகச் செலுத்தியிருந்தால்

## வரையறைகள்

**பயங்கரவாத செயல்கள்** எனப்படுவது, ஒருவர் அல்லது ஒரு குழு (இவற்றில் வலிமை அல்லது வன்முறையைப் பயன்படுத்துவது அல்லது அச்சுறுத்துவது உள்ளடங்கும்) அரசியல், மதவாத, சித்தாந்தரீதியாக அல்லது அதுபோன்ற நோக்கங்களுக்காக அரசை அல்லது மக்களை அல்லது மக்கட்தொகையின் ஒரு பகுதியினரை வலுவந்தமாகப்

பயங்கொள்ள வைக்கும் அச்சுறுத்துதலாக வரையறுக்கப் படுகிறது.

கொள்ளையடித்தல் அல்லது குற்றச் செயல்கள் எனப்படுபவை, முக்கியமாக தனிநபர் பலன்பெற செய்யப்படும் செயல்கள் ஆகும், தனிநபர் உறவுகள் **பயங்கரவாதச் செயல்களில்** கருதப்படாது. மேலும் அரசினால் **பயங்கரவாதச் செயல்களாக** வரையறுக்கப் பட்டவற்றையும் உள்ளடக்கும். அணுசக்தி ஆயுதங்கள், வேதியியல் மற்றும், உயிரியல் பொருட்களை அல்லது ஆயதங்களைப் பயன்படுத்தி வலுவந்தம் அல்லது வன்முறைச் செயல்களை செய்வதும் **பயங்கரவாதச் செயல்களாகக்** கருதப்படும்.

**விபத்து** அல்லது **விபத்தாக** என்பதன் பொருள், திடீரென, எதிர்பாராத விதமாக மற்றும் வெளியிலிருந்து **காப்பீட்டுக் காலத்தில்** நிகழும் ஒரு செயலே **காயத்துக்குக்** காரணமாக அமைவதாகும்.

**வயது** என்பது **காப்பீட்டுக் காலம்** தொடங்கும் தேதியில் **உங்களது** நடப்பு **வயது** ஆகும்

**எண்டார்ஸ்மெண்ட்** என்பது இப் **பாலிசி** அல்லது **பாலிசியின்** காப்பீடு பற்றிய ஓர் அங்கீகரிக்கப்பட்ட திருத்தம் ஆகும்

**சேர்க்கையை உறுதிப்படுத்துதல்** என்பது**, உங்களது** பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கு ஒரு SMS மூலம் இப் **பாலிசி** பிற விஷயங்களாகிய **காப்பீட்டுக் காலம்** மற்றும் அதன் **தொடக்கத் தேதி** ஆகியவற்றைப் பட்டியலிட்டு உங்களைக் காப்பீட்டுப் பாதுகாப்புக்குள் கொண்டு வந்ததை தெரிவிப்பதாகும்.

**குடும்ப உறுப்பினர்** என்பதன் பொருள், **உங்களது** கணவர் அல்லது மனைவி, குழந்தைகள், பெற்றோர், உடன் பிறந்தவர்கள், துணைவரின் பெற்றோர், மைத்துனர், மைத்துனி, பாட்டன்-பாட்டி, துணைவரின் பாட்டன்-பாட்டி, மருமகன்கள், மருமகள்கள் அல்லது பேரக்குழந்தைகள் ஆவார்கள்.

**தாய் நாடு** என்பது **உங்களது** குடியுரிமை நாடு ஆகும்.

**காயம்** என்பது **காப்பீட்டுக் காலத்தில்** பிற காரணங்கள் அல்லது நிலமைகளின்றி ஒரு **விபத்தினால்** மட்டும் **உங்களது** உடலுக்குச் சேதம் அல்லது ஊறு ஏற்படுதல்.

**இழப்பு** என்பது **உங்களது** உடல் உறுப்பு வெட்டுண்டு அல்லது அறுபட்டு (ஈட்டுத் தொகை மதிப்பீடு அட்டவணையில் பட்டியலிட்டுள்ளபடி) **எமது மருத்துவரால்** உறுதிப்படுத்தப்பட்டு**, நிரந்தரமாக** அல்லது முழுமையாக இழத்தல் ஆகும்.

**கேட்புத்திறனை இழத்தல்** என்பது **எமது மருத்துவரால்** உறுதிப்படுத்தப்பட்டு**, நிரந்தரமாக** அல்லது முழுமையாகக் கேட்கும் திறனை இழத்தல் ஆகும்.

**விரல்களை இழத்தல்** என்பது**, நிரந்தரமாக** அல்லது முழுமையாக**,** கைகளில் மணிக்கட்டுக்கு மேற்புறம் விரல்களை அல்லது கால்களில் கணுக்காலுக்குக் கீழே விரல்களை இழத்தல் ஆகும். இது **எமது மருத்துவரால்** உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**பார்வையை இழத்தல்** என்பது **நிரந்தரமாக** அல்லது முழுமையாக**,** ஒரு கண்ணில் முழுமையாகப் பார்க்கும் திறனை இழத்தல் ஏற்பட்டு அறுவை அல்லது பிற சிகிச்சைகளால் பார்வைத் திறனை மீட்க முடியாமல் இழத்தல் ஆகும். இது **எமது மருத்துவரால்** உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**பேசும்திறனை இழத்தல்** என்பது **நிரந்தரமாக** அல்லது முழுமையாகப் பேசும் திறனை இழத்தல் ஏற்பட்டு, அறுவை அல்லது பிற சிகிச்சைகளால் பேசும் திறனை மீட்க முடியாமல் இழத்தலை **எமது மருத்துவரால்** உறுதிப்படுத்த வேண்டும்.

**மருத்துவர்** என்றால் ஒரு மேற்கத்திய மருத்துவத்தில் பட்டபடிப்பை முடித்துப் பதிவு பெற்ற, சட்டப்படி தகுதிபெற்ற மருத்துவராகி தமது பயிற்சியின் மற்றும் உரிமத்தின் வரம்புகளுக்குள் மருந்துகள் அல்லது அறுவைச்சிகிச்சை மூலம் சிகிச்சையளிக்க சிங்கப்பூர் மருத்துவ அங்கீகார ஆணையத்தின் அங்கீகாரம் பெற்ற மருத்துவர் ஆவார். **உங்களது மருத்துவராக**, **நீங்கள்** அல்லது **உங்களது குடும்ப உறுப்பினர்** அல்லது துணைவர், வர்த்தகப் பங்காளர், பணிக்கமர்த்தியவர், பணியாளர் அல்லது முகமையாளர் ஆகியோர் இருக்க முடியாது.

**காப்பீட்டு காலம்** என்பது, இப் **பாலிசியின்** கீழ் உங்களது **சேர்க்கையை உறுதிப்படுத்தல்** மூலம் **தொடக்கத் தேதியுடன் தெரிவிக்கப்பட்ட** 30 நாட்கள் காலம் ஆகும்.

**நிரந்தரமாக** என்பதன் பொருள், தொடர்ந்து 12 மாதங்களாக நீடித்து அதன் காலாவதிக்குப் பின்னரும் எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் இருத்தல் ஆகும்.

**நிரந்தர ஊனமுற்ற** அல்லது **நிரந்தர ஊனம்** என்பது, **பாலிசியின்** பலன்கள் பிரிவு 2-இல் உள்ள ஈட்டு மதிப்பீட்டு அட்டவணையில் பட்டியலிட்டுள்ள உருப்படிகளில் ஒன்றாக இருக்க வேண்டும், மற்றும் அது **விபத்தினால்** மட்டும் ஏற்பட்டிருக்க வேண்டும்:

- **விபத்து** நடந்த தேதியிலிருந்து தொடர்ந்து 12 மாதங்கள் ஊனம் நீடித்தல்; மற்றும்
- 12 மாதங்களுக்குப் பின்னரும் நிலமையில் முன்னேற்றமில்லை என்பதை **எமது மருத்துவர்** உறுதிப்படுத்துவார்.

**நிரந்தர முழு ஊனம்** என்பது விபத்தினால் மட்டும் ஏற்பட்ட முழு ஊனம் ஆகும். **விபத்து** நடந்த தேதியிலிருந்து தொடர்ந்து 12 மாதங்கள் ஊனம் நீடித்த நிலை இருக்கவேண்டும் மற்றும் 12 மாதங்களுக்குப் பின்னரும் நிலமையில் முன்னேற்றமில்லை என்பதை **எமது மருத்துவர்** உறுதிப்படுத்துவார், மேலும் இவற்றுள் ஒன்று பொருந்த வேண்டும்:

- **உங்களைச்** சம்பளம் அல்லது கூலிக்கு ஏதேனும் பணியில் ஈடுபடுவதை நிறுத்துதல் அல்லது **உங்களது** மீத வாழ்நாளில் ஏதேனும் வர்த்தகம் செய்வதையும் கூட தடுத்தல்; அல்லது
- **உங்களது காயத்தின்** காரணமாக, நிரந்தரமாக **உங்களது** படுக்கையில் இருக்கும் விளைவு , அதனால் **நீங்கள்** படுக்கையிலேயே தடுத்து வைக்கப் பட்டிருத்தல்.
- **உங்களது** கைகள் அல்லது கால்களை அசைக்க முடியாதபடி **உங்களுக்கு** முழுமையாகப் பக்கவாதப் பாதிப்பு நிலை விளைந்திருத்தல்.

**பாலிசி** என்பது ஓர் ஆவணம், நாம் வழங்கிய திருத்தங்கள் உட்பட, சேர்க்கையை உறுதிப்படுத்துதல் வழங்கப்பட்டு ஆவண என்ற எண்ணுடன் இந்த ஆவணம் பாலிசிதாரரால் வழங்கப்படுகிறது.

**பாலிசிதாரர்** என்பது SingCash Pte Ltd-ஐக் குறிக்கிறது.

**முன்பு-உள்ள மருத்துவ நிலமைகள்** என்பதன் பொருளாவது, பின்வரும் நிலைகள் உட்பட இருக்கும் ஏதேனும் காயங்கள் அல்லது நோய்கள் ஆகும்; அவையாவன:

- **நீங்கள்** அறிந்திருப்பது அல்லது அறிந்திருக்க வேண்டியது; அதாவது **காப்பீட்டுக் காலம்** தொடங்கும் முன்பே, இருக்கின்ற அறிகுறிகள் அடிப்படையில் நீங்கள் அறிந்துகொண்ட நோய்; அல்லது,
- அதற்காக **நீங்கள்** நோய்கண்டறிதல், ஆலோசனை, மருத்துவ சிகிச்சை அல்லது பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் ஆகியவற்றை **காப்பீட்டுக் காலம்** தொடங்கும் முன் 12 மாதங்களுக்குள் எடுத்துக் கொண்டிருத்தல்; அல்லது,
- அதற்காக ஒரு **மருத்துவரால் பாலிசி** தொடங்கும் முன் 12 மாதங்களுக்குள் சிகிச்சை அல்லது மருத்துவ ஆலோசன பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருத்தல்.

**நோய்** என்பது **காப்பீட்டுக் காலத்தில் விபத்து** அல்லாத காரணத்தினால் ஒரு உடலியல் பிரச்சினை ஏற்பட்டு அதற்காக **உங்களுக்கு மருத்துவரின்** சிகிச்சை தேவைப்படுதல்.

**தொடக்கத் தேதி** என்பது, **சேர்க்கையை உறுதிப்படுத்துதலில்** தெரிவிக்கப் பட்டுள்ளபடி **உங்களது** பாலிசியின் பாதுகாப்பு தொடங்கும் தேதி ஆகும்.

**காப்பீட்டு அட்டவணை** என்பது இப் **பாலிசி** அமலில் இருக்கும்போது கிடைக்கும் பலன்கள் ஆகும், அவை இப் **பாலிசியின்** ஷரத்துகள், நிபந்தனைகள் மற்றும் தகுதிநிலைகள் ஆகியவற்றைப் பொறுத்தது.

**நாம்**, **நமது**, **எமது** என்ற சொற்கள் NTUC Income Insurance Co-operative Limited. நிறுவனதைக் குறிப்பிடுவன ஆகும்.

**நீங்கள்**, **உங்களது** மற்றும் **உங்களுக்கு** ஆகிய சொற்கள் இப் **பாலிசியின்** பலன்களைப் பெற **பாலிசிதாரரால்** நியமனம் பெற்ற தகுதி வாய்ந்த தனி நபர்களைக் குறிக்கும்.

# பலன்கள்

| பிரிவு 1 – விபத்தில் மரணம் | | |
|---|---|---|
| **நாம் எப்போது பணம் செலுத்துவோம்** | **நாம் செலுத்துவது என்ன** | **நாம் செலுத்த முடியாதது என்ன** |
| A **நீங்கள்** ஒரு **விபத்தைச்** சந்தித்து அந்த **விபத்தினால்** மட்டும் **உங்களுக்கு விபத்து** நடந்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மரணமேற்படுதல். | 1 **நாம் காப்பீட்டு அட்டவணையில்** காட்டப்பட்டுள்ள அதிகப்பட்ச தொகையை வழங்குகிறோம். .<br>2 ஒரே நிகழ்வுக்காக பிரிவு 1 அல்லது பிரிவு 2 ஆகிய இரண்டில் ஒன்றில் மட்டுமே கோரலைச் சமர்ப்பிக்க முடியும், இரண்டிலும் சமர்ப்பிக்க முடியாது.<br><br>3 **நாம் காப்பீட்டுக் காலத்திற்குள் உங்களுக்கு** ஏற்பட்ட **நிரந்தர ஊனத்துக்கு** வழங்கப்பட்ட ஈட்டுத் தொகையை, **விபத்தினால்** மரணமேற்பட்டால் அப்போது வழங்கப்படும் ஈட்டுத்தொகையில் பிடித்தம் செய்து கொள்வோம். | பகுதி 3-இல் விவரிக்கப் பட்டுள்ள பொது நிபந்தனைகளின் விலக்குகள் தவிர, பின்வருவனவற்றுக்கும் **நாம்** பணம் செலுத்த மாட்டோம் அல்லது சேதம் அல்லது நட்டம் நேரடியாக அல்லது மறைமுகமாக பின்வருவனவற்றின் காரணத்தால் நிகழ்ந்தது எனில் பணம் செலுத்த மாட்டோம்.<br><br>1 மரணம் நேரடியாக அல்லது மறைமுகமாக **நோயின்** காரணமாக நிகழ்ந்தது மாறாகக் **காயத்தினால்** அல்ல. உதாரணமாக, **நீங்கள்** மாரடைப்பால் மரணமடைந்தால் கோரலுக்குப் பணம் செலுத்தப்படாது.<br>2 **காப்பீட்டுக் காலத்துக்கு** முன்பே உள்ள நேரடியான அல்லது மறைமுகமான உடலியல் ஊனத்தின் காரணமாக மரணம் ஏற்படுதல். |
| பிரிவு 2 – நிரந்தர ஊனம் | | |
| **நாம் எப்போது பணம் செலுத்துவோம்** | **நாம் செலுத்துவது என்ன** | **நாம் செலுத்த முடியாதது என்ன** |
| A **நீங்கள்** ஒரு **விபத்தைச்** சந்தித்து அந்த **விபத்தினால்** மட்டும் **உங்களுக்கு விபத்து** நடந்த | 1 **நாம் காப்பீட்டு அட்டவணையில்** காட்டப்பட்டுள்ள அதிகப்பட்ச வரம்பு தொகையை, கீழே | பகுதி 3-இல் விவரிக்கப் பட்டுள்ள பொது நிபந்தனைகளின் விலக்குகள் தவிர, பின்வருவனவற்றுக்கும் |

| | | |
|---|---|---|
| தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் **நிரந்தர ஊனம்** ஏற்படுதல். | கொடுக்கப்பட்டுள்ள ஈட்டு மதிப்பீட்டு அட்டவணையின் அடிப்படையில் வழங்குகிறோம்.<br><br>2 ஒரே நிகழ்வுக்காக பிரிவு 1 அல்லது பிரிவு 2 ஆகிய இரண்டில் ஒன்றில் மட்டுமே கோரலைச் சமர்ப்பிக்க முடியும், இரண்டிலும் சமர்ப்பிக்க முடியாது. | **நாம்** பணம் செலுத்த மாட்டோம் அல்லது சேதம் அல்லது நட்டம் நேரடியாக அல்லது மறைமுகமாக பின்வருவனவற்றின் காரணத்தால் நிகழ்ந்தது எனில் பணம் செலுத்த மாட்டோம்.<br>1 நிரந்தர ஊனம் நேரடியாக அல்லது மறைமுகமாக **நோயின்** காரணமாக ஏற்பட்டது மாறாகக் **காயத்தினால்** அல்ல. உதாரணமாக, பக்கவாத பாதிப்புக்குப் பின்னர் **நீங்கள் நிரந்தர ஊனம்** அடைந்தால் **நாம்** உங்களது கோரலுக்குப் பணம் செலுத்த மாட்டோம்..<br>2 **பாலிசி** தொடங்கும் முன்பே உள்ள நேரடியான அல்லது மறைமுகமான உடலியல் குறைபாடு காரணமாக **நிரந்தர ஊனம்** ஏற்படுதல்.<br>3 இப் **பாலிசி காலத்தில்** ஈடு வழங்கத் தக்க பெரிய உருப்படியின் கீழ் உள்ள குறிபிட்ட உருப்படிக்கு கூடுதல் ஈடு வழங்கப்படாது. உதாரணமாக, மேற்பகுதியிலுள்ள உறுப்புக்கு ஈடு வழங்கப்பட்டபின்பு, பெரிய உறுப்பின் பகுதியாகிய சிறிய உறுப்புக்கு ஈடு வழங்கப்படாது. உதாரணமாக, புஜம் பகுதிக்கு ஈடு வழங்கப்பட்டு விட்டால், நாம் மீண்டும் விரல் அல்லது பெருவிரலின் இழப்புக்கு **நாம்** ஈடு வழங்க மாட்டோம். |

**ஈட்டு மதிப்பீட்டு அளவுகோல்**

| உருப்படி | ஊனத்தின் விளக்கம் | காப்பீட்டு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சதவீதம் |
|---|---|---|
| a. | **நிரந்தர முழு ஊனம்** | 100% |
| b. | இரு கண்களிலும் **பார்வை இழத்தல்** | 100% |
| c. | இரண்டு **கரங்களையும் இழத்தல்** | 100% |
| d. | ஒரு கண்ணில் **பார்வை இழத்தல்**, வெளிச்சத்தை உணர்வது தவிர | 50% |
| e. | ஒரு **கரத்தை இழத்தல்** | 50% |
| f. | **பேசும் திறனை இழத்தல்** | 50% |
| g. | இரு காதுகளின் **கேட்புத் திறனை இழத்தல்** | 50% |
| h. | ஒரு கரத்தில் நான்கு விரல்களை **இழத்தல்** | 50% |
| | **மூன்றாம் கட்ட நெருப்புக் காயங்கள்** | |
| i. | தலை – மொத்த உடற்பரப்பில் சேதமடைந்த சதவீதம்<br>- 8%-க்கு சமமாக அல்லது அதிகமாக;<br>- 5%-க்கு சமமாக அல்லது அதிகமாக ஆனால் 8%-க்கும் குறைவாக; அல்லது<br>- 2%-க்கு சமமாக அல்லது அதிகமாக ஆனால் 5%-க்கும் குறைவாக. | 100%<br>75%<br>50% |
| j. | உடல் - மொத்த உடற்பரப்பில் சேதமடைந்த சதவீதம்<br>- 20%-க்கு சமமாக அல்லது அதிகமாக<br>- 15%-க்கு சமமாக அல்லது அதிகமாக ஆனால் 20%-க்கும் குறைவாக; அல்லது<br>- 10%-க்கு சமமாக அல்லது அதிகமாக ஆனால் 15%-க்கும் குறைவாக . | 100%<br>75%<br>50% |

ஊனம் ஈட்டு அளவுகோல் அட்டவணையில் இடம் பெற வில்லையெனில் **நாம்** ஈட்டுத்தொகை வழங்க மாட்டோம்.

இந்தப் பிரிவில் கணக்கிடப்பட்ட மொத்தக் காப்பீட்டுத் தொகை 100% தாண்டி இருக்கக் கூடாது.

# பொது நிபந்தனைகள்

## 1. நிலவியல் வரம்பெல்லை

இப் **பாலிசி உங்களுக்கு** சிங்கப்பூரிலும் வெளிநாட்டிலும் காப்பீடு வழங்குகிறது, நீங்கள் உங்கள் தாய்நாடு சென்று தங்கும் நாட்கள் 30 நாட்களுக்கு அதிகமிருந்தால் தவிர.

## 2. பலன்களை நீட்டித்தல்

### a. இடருக்குட்படுதல்

ஒரு **விபத்தில்** நீங்கள் இயற்கை மூலங்களின் இடர்களுக்குட்படும்போது ஏற்படும் **காயங்களுக்கு** அல்லது மரணம் சம்பவித்தால், நாம் **காப்பீட்டு அட்டவணையின்** பொருந்தும் பிரிவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள அதிகப்பட்ச வரம்புத் தொகையை வழங்குகிறோம்.

### b. புகை, நச்சு நெடி, வாயுவில் மூச்சுத்திணறுதல் அல்லது மூழ்குதல்

**காப்பீட்டுக் காலத்தில் நீங்கள்** புகை, நச்சு நெடி, வாயு ஆகியவற்றை ஒரு விபத்தில் சுவாசித்து ஏற்படும் காயம் அல்லது மரணத்தைத் தழுவினால் நாம் **காப்பீட்டு அட்டவணையின்** பொருந்தும் பிரிவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள அதிகப்பட்ச வரம்புத் தொகையை வழங்குகிறோம். இந்த நிகழ்வுகளில் உங்களது செயற்பாடு வேண்டுமென்றே செய்யப்பட்டது அல்ல என்றால் மட்டுமே இந்த நீட்டிப்பு செல்லுபடியாகும்.

## 3. பொதுவான விலக்குகள்

இப் **பாலிசி** பின்வரும் நிலைகளில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் சேதங்கள் மற்றும் நட்டங்களில் எழும் கோரல்களை பாதுகாக்காது:

- **a** ஏதேனும் **அறிந்த நிகழ்வு**.
- **b** **நீங்கள்** வேண்டுமென்றே தாமே காயம் ஏற்படுத்திக் கொள்ளுதல், புத்தி சுவாதீனத்துடன் அல்லது புத்தி சுவாதீனம் இல்லாமல் தற்கொலை செய்து கொள்ளுதல் அல்லது தற்கொலை முயற்சி, **உங்களது** குற்றவியல் செயற்பாடு, கோபம் கொண்டு தாக்குதல், தம்மைத்தாமே ஆபத்தில் மாட்டிக் கொள்ளுதல் (பிற மனிதரின் உயிரைக் காப்பாற்றும் முயற்சி தவிர).
- **c** மது அல்லது போதை மருந்துகளின் பாதிப்பு .
- **d** கர்ப்பம், குழந்தைப்பேறு, கர்ப்பக்கலைப்பு, கருச்சிதைவு, அல்லது இது போன்ற நிலமைகளில் ஏற்படும் இறப்பு.
- **e** மனநலப் பிரச்சினைகள் அல்லது புத்தி சுவாதீனம் இழத்தல்.
- **f** பாலியல் தொற்று நோய்கள், ஹியூமன் இம்முனோ டெபிஷியன்சி வைரஸ் (HIV) அல்லது பிற HIV தொற்றுகள் AIDS உள்பட, அல்லது எவ்வகையிலும் இந்த வைரசின் மூலம் ஏற்பட்ட சடுதிமாற்ற வகைகள் அல்லது மாறிகளின் தொற்றுகள்.
- **g** **தொடக்கத் தேதிக்கு முன்பே உள்ள மருத்துவ நிலமைகள்** அல்லது உடலியல் பிரச்சினைகள்**.**

**h** ஒரு பயணியாக பயணிகள் விமானம் அல்லது உரிமம் பெற்ற, பயணிகள் பயணிக்கும் விமானம் தவிர, **நீங்கள்** மேற்கொள்ளும் பறத்தல் அல்லது வான் சாகசங்கள்.

**i** **நீங்கள்** பங்கேற்கும் வேகப்பந்தயப் போட்டி அல்லது ரேசிங் (தடகள ஓட்டம் தவிர)

**j** **நீங்கள்** பங்கேற்கும் அபாயமான செயல்கள் அல்லது சாகச விளையாட்டுகளில் உள்ளடங்கும் குகைப் பயணம், இடர்பாதைப் பயணம், செங்குத்துப் பாறை ஏற்றம் (செயற்கையாக உருவாக்கப்பட்டவை தவிர) அல்லது கயிறுகள் கட்டி ஏறும் மலை ஏற்றம், நீரடி சுவாசக்கருவியுடன் செய்யும் நீர் மூழ்கி செயற்பாடுகள், ஸ்கை டைவிங் மலை முகட்டிலிருந்து குதித்தல், பங்கி ஜம்பிங், BASE (கட்டிடம், சமிக்கைக் கோபுரம், ஸ்பான், நிலம்) ஜம்பிங், பாராகிளைடிங், ஹாங்கிளைடிங், பாராசூட்டிங், நதியோட்ட ராஃப்டிங், டிராகன் போட் சவாரி, வேட்டையாடுதல், குதிரைச் சவாரி, போலோ, ஷோ ஜம்பிங், மலையில் பைக் சவாரி- இன்கம் எழுத்துப்பூர்வ ஒப்புதல் வழங்கியது தவிர, உரிமம் பெற்ற வழிகாட்டி அல்லது பயிற்சியாளரின் மேற்பார்வையில் தவிர விளையாடப்படும் பிற பொழுதுபோக்கு விளையாட்டுகள்: சிங்கப்பூருக்கு வெளியில் பங்கேற்கும் வெப்பவாயு பலூன் பயணம், பனிச்சறுக்கு அல்லது குளிர்கால விளையாட்டுகள், ஹைக்கிங் அல்லது டிரெக்கிங்.

**k** ஏதேனும் **பயங்கரவாதச் செயல்கள்**, போர், புரட்சி அல்லது அதைப்போன்ற நிகழ்வுகளின் விளைவுகள்.

**l** அணுஉலை எரிபொருள், தளவாடப்பொருட்கள் அல்லது கழிவுகள் ஆகியவற்றின் கதிரியக்கம் அல்லது சேதங்கள்.

**m** இப் **பாலிசியின்** கீழ் **காயங்களிலிருந்து** பாதுகாக்கும் அல்லது கோரல்களைக் குறைக்கும் பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளை **நீங்கள்** மேற்கொள்ளத் தவறுதல்.

**n** **நீங்கள்** ஏதேனும் கடற்படை, இராணுவ, விமானப்படைச் சேவைகளில் பங்கேற்றல் அல்லது திட்டமிட்ட சிவில் அல்லது இராணுவ அதிகாரிகளால் திட்டமிடப்பட்ட பயிற்சிகள் அல்லது தாக்குதல் செயற்பாடுகளில் பங்கேற்றல்.

**நாங்கள்** இங்கு பட்டியலிடப்பட்டுள்ள விலக்குகளின்படி ஒரு கோரலை ஏற்காமல் ஈடு செலுத்த மறுக்கும்போது, **எமது** முடிவை ஒப்புக்கொள்ள மறுத்தால் நாம் எடுத்த முடிவு தவறு மற்றும் அக்கோரலை நாங்கள் சட்டப்படி செலுத்த வேண்டும் என நிருபிப்பது **உங்கள்** பொறுப்பாகும். ஏதேனும் ஒரு பகுதி விலக்கை அமல் படுத்த முடியாமல் செல்லாமற் போனாலும், விலக்கின் எஞ்சிய பகுதியை அது பாதிக்காது

## 4. பிரிமியம் செலுத்துதல் உத்திரவாதம்

இப் **பாலிசியின்** கீழ் **உங்களுக்குக்** காப்பீட்டுப் பாதுகாப்பு வழங்குவதற்கு **பாலிசிதாரர்** பிரிமியங்களைச் முழுமையாகச் செலுத்தியிருக்க வேண்டும் மற்றும் உங்களது காப்பீட்டுத் **தொடக்கத் தேதியிலிருந்து** 60 நாட்களுக்குள் எம்மால் அது முழுமையாகப் பெறப்பட வேண்டும்.

ஏதேனும் நிகழ்வில் பிரிமியம் செலுத்தப்படாமல் நிலுவையாகி மேற்கூறப் பட்டபடி 60 நாட்களுக்குள் **எம்மால்** முழுமையாகப் பெறப்படாமல் போனால் இப் **பாலிசியின்** கீழ் **உங்களது** காப்பீடு தொடக்கத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குப் பின்னர் காலாவதியாகி முடிந்துவிடும்.

## 5. பணம்செலுத்துதல் பலன்கள்

இப் **பாலிசியில்** பட்டியலிடப்பட்டுள்ள பலன்களை நாங்கள் வழங்குவது இந்த நிலைகளில் மட்டுமே::

a **பாலிசிதாரர்** பொது நிபந்தனை 4-ஐ நிறைவேற்றி இருத்தல், மற்றும்

b பொது நிபந்தனை 12-இல் விவரித்துள்ளபடி எமக்கு கோரலுக்கான திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பித்திருக்க வேண்டும்.

காப்பீட்டு அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி அனைத்துப் பலன்களையும் **நாம்** செலுத்துவோம், மரணத்தைப் பொறுத்தவரையில் பிரிவு **1 –** விபத்தில் மரணம் பிரிவில் விவரித்துள்ளபடி **நீங்கள்** மரணமடைந்தால் **உங்களது** சட்டப்பூர்வப் பிரதிநிதிக்கு பலன்கள் செலுத்தப்படும்.

மேலே விவரித்துள்ளபடி **உங்களுக்குப்** பலன்கள் செலுத்தப்பட்டபோது, இப் **பாலிசியின்** கீழ் மேற்கொண்டு எந்த கோரலுக்கும் செலுத்தும் பொறுப்பு **எமக்குக்** கிடையாது.

## 6. மாறாட்டம்

**நீங்கள்** அல்லது **உங்கள்** சார்பில் **பாலிசிதாரர்**, ஏதேனும் தகவல்களை மறைத்தல் அல்லது மாறாட்டம் செய்தால், இப் **பாலிசியின்** கீழ் **உங்களது** காப்பீட்டை முடிவு செய்யும் விஷயத்தை அது பாதிக்கும் மேலும் உங்களது காப்பீட்டை இரத்து செய்து விடுவோம்.

## 7. மோசடி

**நீங்கள்** மோசடியான வழியில் செயல்படக் கூடாது. **உங்கள்** மீது அல்லது **உங்கள்** சார்பில் செயல்படுபவர் மீது **நாம்** கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுப்போம்.

**a** **பாலிசியின்** கீழ் தெரிந்தே கோரல்களை தவறாக அல்லது மோசடியாக மிகைப்படுத்தி கோருதல்;

**b** வாக்குமூலம் தவறானது எனத் தெரிந்தே கோரலை ஆதரித்து வாக்குமூலம் தருதல்;

**c** மோசடியானது என்று தெரிந்தே ஒரு மோசடிசெய்த அல்லது தவறான ஆவணத்தை அனுப்புதல்; அல்லது

**d** **நீங்கள்** வேண்டுமென்றே அல்லது அறிந்தே ஏற்படுத்திய **சேதம்** அல்லது **நட்டத்துக்கு** ஈடு கோரல்.

**நாம்** எடுக்கும் நடவடிக்கை:

**a** கோரலுக்கு ஈடு செலுத்த மாட்டோம்;

**b** **உங்களது** இப் **பாலிசியின்** கீழ் கோரியுள்ள கோரல் அல்லது எதிர்காலத்தில் கோரப்படும் கோரல்களுக்கு ஈடு செலுத்த மாட்டோம்;

**c** இப் **பாலிசியின்** கீழ் **உங்களது** காப்பீட்டைச் செல்லாதது எனத் தீர்மானிப்போம்;

**d** இப் **பாலிசியின்** கீழ் **உங்களுக்கு** அல்லது **உங்களது** சட்டப்பூர்வப் பிரதிநிதிக்குக் கோரலுக்குச் செலுத்தப்பட்ட தொகையை மீட்போம்;

**e** **உங்களது** காப்பீட்டுக்காகப் **பாலிசிதாரர்** செலுத்திய ஏதேனும் பிரிமியம்

தொகையைத் திரும்ப வழங்க மாட்டோம்;

f **எம்மிடமிருந்து** பிற பாலிசிகளை **நீங்கள்** வாங்குவதை அனுமதிக்க மாட்டோம்; அல்லது

g **உங்கள்** மீது காவல்துறைக்குப் புகார் அளிப்போம்.

## 8. நியாயமான கவனம்

**விபத்து** மற்றும் **காயம்** ஏற்படாமல் நியாயமான முன்னெச்சரிக்கைகளை மேற்கொண்டு கோரல்களைக் குறைந்தபட்சமாக்கும் நடைமுறைகளை **நீங்கள்** மேற்கொள்ள வேண்டும்.

## 9. இரட்டைக் காப்பீடுகள்

இப் **பாலிசியின்** கீழ் **நீங்கள்** ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீடுகளைப் பெற்றிருந்தால், அதிகப்பட்சமாக 2 காப்பீடுகளை மட்டுமே **நீங்கள்** துயருற்ற ஒரே **விபத்து** ஏற்க முடியும்.

## 10. உங்களது உரிமைகளைப் பொறுப்பேற்றல்

**உங்கள்** பெயரிலுள்ள **உங்களது** அல்லது **எமது** உரிமைகளை**,** பிறருக்கு எதிராகப் பாதுகாக்க அவற்றை **நாம்** பொறுப்பேற்க முடியும்.

## 11. கோரல் நிபந்தனைகள்

இப் **பாலிசியின்** கீழ் ஏதேனும் நிகழ்வுக்குக் கோரல்களை எழுப்ப, **நீங்கள்** அதை இயன்றவரையில் விரைவாக 30 நாட்களுக்குள் **எமக்குத்** தெரிவிக்க வேண்டும். கோரலை மறுக்கும் உரிமை **எமக்கு** உண்டு மற்றும் நிகழ்வு நடந்த 30 நாட்களுக்குப் பின்னர் **நீங்கள்** அதைத் தெரிவித்தால், எந்தக் கோரலையும் செலுத்தும் பொறுப்பு **எமக்கு** இல்லை.

**நாம்** அனைத்துக் கோரல்களையும் சிங்கப்பூர் டாலரில் செலுத்துவோம்.

## 12. கோரலைச் சமர்ப்பிக்கும்போது எமக்கு அனுப்ப வேண்டியவை

கோரல்களை **நாங்கள்** மதிப்பீடு செய்யுமுன்னர், **நீங்கள்** அல்லது **உங்களது** சட்டப்பூர்வப் பிரதிநிதி, அனைத்து தகவல்கள், அறிக்கைகள், அசல் இன்வாய்சுகள் மற்றும் இரசீதுகள், சாட்சிகள், மருத்துவச் சான்றிதழ்கள், தேவைப்பட்டால் சத்தியப் பிரமாணம் மூலம் உறுதிப்படுத்திய (அந்நிய மொழியிலுள்ள ஆவணங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் போன்றவை) ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

## 13. இரத்து மற்றும் திருத்தங்கள்

a அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி அல்லது தொடர்பெண் மூலமாக **பாலிசிதாரருக்கு** 7 நாட்கள் கால அறிவிப்பு கொடுத்து **நாம்** இப் **பாலிசியின்** கீழ் **உங்களது** காப்பீட்டை இரத்துச் செய்ய முடியும். **நாம்** கைமுறையாக, அஞ்சல், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் இரத்து அறிவிப்பு கொடுக்கப்படும்போது, அதே நாளில் அதைப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படும். சந்தேகம் தீர, **உங்களுக்கு** இரத்து பற்றி அறிவிக்க **எமக்கு** எந்தவிதக் கடப்பாடும் கிடையாது.

b இப் **பாலிசியின்** கீழ் **உங்களது** காப்பீட்டுப் பாதுகாப்பை **பாலிசிதாரர் எமக்கு** எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்து இரத்துச் செய்ய முடியும். **பாலிசிதாரரிடமிருந்து** எமக்குக் கிடைக்கும் இரத்து அறிவிப்பைப் பொறுத்து காப்பீடு இரத்தாகும் தேதி முடிவாகும்.

c இப் **பாலிசியின்** கீழ் நீங்களே காப்பீட்டுப் பாதுகாப்பை **எமக்கு** எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்து இரத்துச் செய்ய முடியும். **உங்களிடமிருந்து எமக்குக்** கிடைக்கும் இரத்து அறிவிப்பைப் பொறுத்து காப்பீடு இரத்தாகும் தேதி முடிவாகும்.

d குறைந்தபட்சம் 3 மாதங்கள் கால எழுத்துப்பூர்வ இரத்து அறிவிப்பு கொடுத்து **நாங்கள்** அல்லது **பாலிசிதாரர் பாலிசியை** இரத்துச் செய்ய முடியும். காப்பீட்டுக் காலம் முடியும் முன்பே இரத்து தேதி வந்துவிட்டால், **உங்களின் காப்பீட்டுக் காலத்தின்** காலாவதி தேதியன்று முடிவடைந்து விடும்.

e **பாலிசிதாரரின்** ஒப்புதலுடன் **நாம் பாலிசியில்** மாற்றங்களைச் செய்யலாம். **உங்களின் காப்பீட்டுக் காலம்** முடியும் முன்பு **பாலிசியில்** மாற்றங்கள் செய்யப்பட்டால் அது நடப்பில் உள்ள **உங்களது** காப்பீட்டைப் பாதிக்காது.

## 14. காப்பீட்டின் முடிவு

**உங்களது** காப்பீடு உடனடியாக முடிவடைந்து விடும்:

a பொது நிபந்தனைகள் 4, 6, 7, அல்லது 13 –இன் கீழ் **நாம் உங்களது** காப்பீட்டை அல்லது **பாலிசியை** இரத்துச் செய்யும்போது;

b பிரிவு 1 – விபத்தில் மரணம் பிரிவின் கீழ் 100% அல்லது பிரிவு 2 – நிரந்தர ஊனம் பிரிவின் கீழ் 50% காப்பீட்டுக்கு உறுதிகூறப்பட்ட தொகையைச் செலுத்தி பொது நிபந்தனைகளின் கீழ் **நாம் உங்களது** காப்பீட்டை அல்லது **பாலிசியை** இரத்துச் செய்யும்போது; அல்லது

c **நாங்கள்** காப்பீட்டைத் தொடர எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொள்ளாத வரையில்**,** **நீங்கள்** மேற்கொண்டு ஏதேனும் தகுதி நிலையைப் பூர்த்தி செய்யாதபோது.

மேற்கூறப்பட்ட (a) அல்லது (b) நிபந்தனையின் கீழ் **பாலிசி** முடிவடையும்போது, மேற்கொண்டு **நீங்கள் எம்மிடமிருந்து பாலிசி** வழங்கல் அல்லது பலன்களைப் பெறத் தகுதிபெற மாட்டீர்கள்.

**நாங்கள்** காப்பீட்டைத் தொடர எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொள்ளாத வரையில்**,** இந்தப் **பாலிசியை** வாங்குகிற ஏதேனும் தகுதி நிலைகளைப் **பாலிசிதாரர்** மேற்கொண்டு பூர்த்தி செய்யாதபோது பாலிசி உடனடியாக முடிவடைந்துவிடும்.

## 15. மூன்றாம் தரப்பு உரிமைகளை விலக்குதல்

இப் **பாலிசியில்** காப்பீடு பெறாத நபர் அல்லது நிறுவனம் ஒப்பந்த (மூன்றாம் தரப்பு உரிமைகள்) சட்டத்தின் (அத்தியாயம் 53B) கீழ் இப் **பாலிசியை** அமல் படுத்த எந்த

உரிமையும் கிடைக்கும்

## 16. சசலாவைி ைற்றுன்வட்டி

**பாலிசி** மற்றும் **காப்பீட்டு** அட்டவமையில் கொட்டப்பட்டுள்ள டொலர் மதொலககள் சிங்கப்பூர் டொலர் (S$) மதொலககள் ஆகும். இப் **பாலிசியின்** கீன் வைங்கப்படும் மதொலககளுக்கு **நான்** வட்டிலயச் நசர்த்து வைங்குவதில்லல.

## 17. தைடெசய்யப்பட்டுள்ள நபர்கள்

**நீங்கள்** ை தெடசய்யப்பட்டுள்ளவர் அல்லது அவ்வாறு தைடெசய்யப்படுவ் தற்கு ப **ெசபாரத்தெமானவர்** என்றால்:

- **உங்கள்** விண்ணப்பத்டத நிராகரிக்க **எங்களுக்கு** உரிடயுண்டு; மைலும்
- உங்களுக்கு ஏமதனும் **பொலிசி** வழங்கப்பட்டிருந்தால், **எங்களுக்கு** அந்தப் பாலிசிடய முடித்துக் சகாள்ளும்
  உரிடையுண்டு, அதாவது **பொலிசியின்** கீழ் ஏமதனும் பலன் செலுத்த முடியாது அல்லது ஏமதனும் பரிவர்த்தைட செய்ய அனுதைிக்க முடியாது. பாலிசி முடித்துக் சகாள்ளப்படும்மபாது பயன்படுத்தப்பைாத பிரிமியத்டத **நொம்** திருப்பி வழங்க ைாட்மைாம்.

மேற்கூறப்பட்டவற்றில் **எங்கள்** முடிவுகள் அனைத்து விடயங்களைப் பொறுத்தவரை இறுதியானதாகும்.

**பாலிசிதாரர்** அல்லது **நீங்கள், பொருத்தமானவர்** என்று வரையறைக்குட்படுகிறவராக உங்கள் அடையாளம், நிலைமை அல்லது அடையாள ஆவணங்களில் ஏதேனும் மாற்றம் இருந்தால், உடனடியாக **எங்களுக்குத்** தெரிவிக்கவும்.

இந்தப் பொது நிபந்தனை 17-இன் நோக்கம் என்னவென்றால், பின்வரும் தடித்த எழுத்துச் சொற்களின் பொருள் கீழ்க்கண்டவாறு எடுத்துக்கொள்ளப்படும் :

**தைடெசய்யப்பட்டுள்ள நபர்** அல்லது சட்டவைரயைற நபர் என்பதன் பொருள், **சம்பந்தப்பட்ட நபர்** அல்லது சட்டவைரயைற நபர் என்பதாகும்:

- எந்த ஒரு நாட்டின், அரசுகளுக்கு–இடையான, அரசாங்க, ஒழுங்குமுறை அல்லது சட்ட அமலாக்க ஆணையங்கள் வகுத்துள்ள சட்டங்கள், ஒழுங்குமுறைகள் அல்லது அமல்படுத்தப்படும் தடைப்பு ஆணைகள் ஆகியவற்றுக்குட்பட்டு, **நாங்கள்** பாலிசி வழங்குவைத அல்லது பாலிசியின் கீழ் எந்தப் பரிவர்த்தைனயும் செய்யப்படுவைத தைடெசய்த அல்லது கட்டுபடுத்தி வைக்கப்பட்டுள்ளவர், அல்லது
- பயங்கரவாதம் அல்லது சட்டவிரோதச் செயல்கள் ஈடுபட்டுள்ளவர் அல்லது பட்டியலிடப்பட்டுள்ள தடுப்பு ஆணைைகள அல்லது கணக்குகைள உைறநிலையில வைக்கும் ஆணைையப் பெற்றுள்ளவர்.

**ெம்பந்தப்பட்ை நபர்** என்ற ெ சால் சபற்மறார், ைாற்றான் சபற்மறார், பிள்டள, ைா ற்றான் பிள்டள, தத்துப் பிள்டள, வாழ்க்டகத் துடண, உடைன்பிறந்தவர், ை ா ற்றான்-உடைன் பிறந்தவர், தத்சதடுத்த-உடைன்பிறந்தவர், ை ா ைைார் ை ா மியார், ை ருைகன்/ைருைகள், ை டத்துைர் /டைத்துனி, ஒன்றுவிட்ை உடைன்பிறந்தவர், அம்ைான், அத்டத, தாத்தா பாட்டி, உடைன்பிறந்தவரின் ை கள், உடைன்பிறந்தவரின் ை கன், மபரப்பிள்டள, ஊழியர், பணிக்கைர்த்தியவர், சூட்ைாளர், தாய் நிறுவைம், துடண நிறுவைம் ைற்றும் பங்கு முதலீட்ைாளர் மபான்றவர்கடள உள்ளைக்குகிறது.

**ெம்பந்தப்பட்ை நபர்** என்ற ெ சால் **ெ பாலிசிதொரர்,** காப்பீடு சபற்றவர், டிரஸ்டி (தர்ைக்கர்த்தா), செட்டிலர், பையாளி, ஒதுக்கீடு சபற்றவர், நியைைர், பணம்சபறுபவர், அடைைாைம் டவத்தவர், விண்ணப்பம்/பாலிசியின நிதியளிப்பவர் , ை மலும் ெ ட்வைடரயடற பருனை் உறவுள்ளவர், அதன் இயக்கு ர், பங்காளர், மைலாளர், நிர்வாக அதிகாரம் சபற்றவர், டகசயாப்பமிடும் அங்கீகாரம சபற்றவர், பங்கு முதலீட்ைாளர் அல்லது பையாளி உரிடையாளர் மபான்றவர்கடள உள்ளைக்குகிறது.

## 18. அமல் பத்தப்பம் சட்மட்

இப் **பால சகுக்**ிங்கப்பர் சட்டம் அமல் பத்தப்பம்.

## 19. ஆட்சேபங் களைத் தீர்த்தல்

**உங் களத**சேூறலில் **எமத**இறுதி ஷிவை திர்ந்தியுடன் ஏற்கவில்லை என் சுஷ் **நீங் கள்** நிதியியல் தொழிற்சார் ஆட்சேபம் தீர்த்தல் மையம் லிமிடட் (FIDReC) எனப்படும் நிதியியல் மற்றும் வாடிக்கையாளர் இடையே எழும் ஆட்சேபங்களைத் தீர்ப்பதில் சிறப்பிடம் சார்பற்ற நடுநிலை நிறுவனத்திடம் உங்களது வழக்கை முறையிடலாம். அவர்களின் இணையத்தள முகவரி www.fidrec.com.sg ஆகும்.

இப் **பாலிசியில் பாலிசிதாரருக்கும் எமக்கும்** இடையே ஏதேனும் கருத்து வேறுபாடு இருந்தால், அதைத் தீர்க்க அமலில் இருக்கும் சிங்கப்பூர் குடியரசின் நடுவாண்மைச் சட்டத்தின் ( அத்தியாயம் 10) கீழ் இப் **பாலிசியின்** கீழ் **பாலிசிதாரரால்** பெறப்படும் தீர்ப்பு, **எமது** மீதுள்ள பொறுப்பில் மேலோங்கும்.

## பின்னூட்டச் செயல்முறை

கீழே உள்ள தகவல்கள் சட்டப்படி கட்டுப்படுத்துபவை அல்ல இவை **உங்களுக்கான** தகவல்களுக்காக மட்டுமே.

**உங்களது கருத்தை கேட்க விரும்புகிறோம்**

**நாங்கள்** மிகச் சிறந்த சேவை மற்றும் வாடிக்கையாளர் நலம் நாடுவதில் உறுதி பூண்டுள்ளோம்.
சிலநேரங்களில் **நாம்** வழங்கும் சேவை **நீங்கள்** எதிர்பார்க்கும் தரத்தில் இருப்பதில்லை என **நீங்கள்** உணர்வதை நாம் அறிவோம். இவ்வாறு நடக்கும்போது அதைக் களைந்து ச ரமைக்க உங்களிடமிருந்துநசும் கேட்டறிய விரும்புகிே றாம்.
தயவுசெய்து உங்கள் பின்னூட்டத்தை www.income.com.sg/enquiry முகவரியில் தெரிவியுங்கள்.

## உங்களுக்கு எமது வசுக்க தி

**நாம்**I:

- **உங்களது** புகார்களை முறையுடன் ஏற்று ஏற்புத் தெரிவிக்கிறோம்
- விரைந்து முழுமையாக ஆய்வு செய்கிறோம்;
- **எமது** முன்னேற்றத்தை **உங்களுக்குத்** தெரிவிக்கிறோம்; மற்றும்
- **உங்களது** புகாரைத் தீர்க்க அனைத்தையும் செய்கிறோம்.

**பாலிசி உரிமையாளர்களின் பாதுகாப்புத் திட்டம்**
இத்திட்டம் சிங்கப்பூர் டெபாசிட் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் (SDIC) நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் பாலிசி உரிமையாளர் திட்டத்தின் கீழ் பாதுகாப்புப் பெற்றுள்ளது. காப்பீடு தானாகவே செயல்படும், நீங்கள் ஏதும் செய்ய வேண்டியதில்லை. காப்பீட்டின் பலன்களின் வகைகள் மற்றும் காப்பீட்டின் வரம்புகள் ஆகியவற்றைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள, இன்கம் நிறுவனத்தைத் தொடர்புகொள்ள அல்லது GIA/LIA அல்லது SDIC வலைத்தளங்களைப் பார்வையிட தயவுசெய்து (www.gia.org.sg or www.lia.org.sg or www.sdic.org.sg) வலைத்தளங்களைப் பார்க்கவும்.